களும், ஓடு மற்றும் தளம் அமைத்த 196 வீடுகளும் ஒரு விநாயகர் கோயிலும், பெருமாள் கோயிலும், குடிநீர்க் கிணறு, பஞ்சாயத்து அலுவலகம், பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளி, மற்றும் பாலவாடி மற்றும் உயர்நிலைப் பள்ளி போன்றவைகள் எல்லாம் அந்த கிராமத்திலே இருக்கின்றன. அதேபோல் பிரதான சாலையில் நிறைய கடைகளும் அங்கேயிருக்கின்றன. ஒட்டு மொத்தமாக அந்தக் கட்டிடங்களுடைய உத்தேச மதிப்பு சுமார் 2 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, தகுந்த வசதியான மாற்று ஏற்பாடுகளை விமான நிலையக் குழு செய்து கொடுப்பதற்கு முன்வருவார்களானால், அந்த இடங்களை அவர்களிடத்திலே ஒப்படைப்பது பற்றி அரசு முடிவு செய்யும்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : தலைவர் அவர்களே, அப்படி விமான தளத்திற்கு அந்த இடத்தை எடுத்துக் கொள்கிற போது, முழு அளவிற்கு அவர்களுக்கு மானியம் வழங்கினாலும் கூட, அந்த ஊரிலே இருக்கிற மக்கள் பல்வேறு இடங்களுக்குப் பிரிந்து செல்லாமல், அது மத்திய அரசோடு ஒட்டியிருக்கின்ற காரணத்தால், விமான தளத்திற்கு எதிரிலே மத்திய அரசுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. எனவே அந்த இடத்தில் இவர்களை இடம் பெயர்த்து அனுப்புவதற்கு இந்த அரசு சிபாரிசு செய்யுமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்த இடத்திற்கு அருகிலே சென்னை வட்டார ராணுவத தளம் இருக்கிறது. அந்த இடத்தை எடுக்கலாம் என்று சம்பந்தப்பட்ட அலுவலர்களை கலந்து ஆலோசிக்கின்ற நேரத்தில், அந்த இடத்திற்கு மிக அருகாமையில் சுடும் பயிற்சி, ‘ பயரிங் ரேஞ்ச் ’ இருக்கின்ற காரணத்தால், அது வசிப்பதற்கு தகுதியற்ற இடம், ஆகவே, கொடுப்பது அவ்வளவு உசிதமாக இருக்காது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எப்படி இருந்தாலும் அவர்கள் ஒரே இடத்தில் இருக்கின்ற வகையில் மாற்று ஏற்பாடு செய்து கொடுத்த பிறகுதான், குறிப்பிட்ட இடத்தை விமானத் தளத்திற்கு மாற்றிக் கொடுப்பது குறித்து அரசு முடிவு எடுக்கும்.

திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்கு வீடுகள்

* 3344—திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்பூரில் உள்ள பனியன் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, திருப்பூரிலுள்ள பனியன் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. கே. ரமணி ; தலைவர் அவர்களே, திருப்பூரிலே பனியன் தொழில் ஒரு பெரிய தொழிலாக பரவலாக வளர்ந்து ஏராளமான மக்கள் கான்சன்ட்ரேசன் அதிகமாக இருக்கக் கூடிய இடம். அந்த இடத்தில் சாதாரண மக்கள் வசிக்கக் கூடிய தன்மையில் உள்ள ஒரு வீடுகட்டும் திட்டத்தை அமைத்து, அவர்களுக்கு அந்த வீட்டு வசதியை செய்து கொடுப்பது மிக மிக அவசியம் என்ற முறையில் ஒரு திட்டத்தை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே. மத்திய அரசில் பொருளாதார உதவியியல் தொழிலாளர் மலிவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் அப்படிப்பட்ட திட்டம் இல்லை என்று நான் பதில் சொல்லியிருக்கிறேன். ஆனால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் தொழிலாளர்களுக்கும், மிகக் குறைந்த வருமானம் உள்ள பிரிவு மக்களுக்கும் வீட்டு வசதியை ஏற்படுத்துகின்ற வகையில், திருப்பூரிலேயும் சுற்று வட்டாரத்தி லேயும் வீட்டு வசதித் திட்டத்தை எதிர்காலத்திலே உறுதியாக இந்த அரசு செய்யும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலுள்ள பனியன் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதுபோன்று தமிழகம் எங்கும் பரவி யிருக்கின்ற லட்சக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்களே, அவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டிக் கொடுக்கவும், அல்லது மத்திய அரசாங்கம் பீடித் தொழிலுக்கு செஸ் வரி மூலமாக நிதி வசூலித்து அதிலே கோடிக்கணக்கான ரூபாய் இருப்பதாகச் சொல்கிறார்களே, அவைகளைப் பெற்றாவது, வீடு கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

9—20 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் மூலம் நகர் பகுதிகளாக இருந்தாலும், கிராமப்புறப் பகுதிகளாக இருந்தாலும் கடன் வழங்கப்பட்டு ஹட்கோ உதவி யுடன் ஏராளமான வீடுகள் கட்டும் திட்டம் ஏற்கெனவே நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிகப்படியான வீடுகளை கூட்டுறவுச் சங்கம் மூலம் கட்டி வருகிறோம். அதே அடிப்படையில் முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தது போல் ஐந்தாண்டுகளில் 500 நகரங்களில்,

1990 மார்ச் 24]

நகரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் சாதாரண ஏழை மக்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு லட்சம் வீடுகள் கட்டித் தரும் அந்தத் திட்டத்தின் அடிப்படையில் தற்போது இடங்கள் தேர்வு செய்யப்பட்டு ஆரம்பக்கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. அத்தகையத் திட்டம் மேலும் கிராமப்புறங் களுக்கு விரிவாக்கப்பட அரசாங்கம் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டும் திட்டத்தின் அடிப்படையில் ஆயிரக் கணக்கான புதிய தொழில் விசைத்தறிப் பகுதிகளில், கிராமப் பகுதிகளில் இருப்பவர்கள் பணியாற்றுகின்றார்கள் வீடு இல்லா மல், அவர்களையும் அந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள .... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 829 மற்றும் 5077, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறு கின்றன.

கான்கிரீட் வீடுகள் கட்டுதல்

*873—திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல். ஈ.ஜி.பி. திட்டத்தில் கட்டப்படும் மரம், ஓடுபோடும் தொகுப்பு வீட்டுத் திட்டத்தை மாற்றி கான்கிரீட் போடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1989–90-ல் மத்திய அரசு, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டங்களை இணைத்துப் புதிய ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காகக் கட்டப்படும் 42,000 தொகுப்பு வீடுகளில் ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 4,000 செலவில் கான்கிரீட் தளம் போட அரசு அனுமதித்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS